## அவசரகூட்டம்

**2022ம் ஆண்டு ஜீலை 29ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு கோட்டக்குப்பம் நகராட்சியில் அவசரகூட்டம் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.**

**முன்னிலை .திரு.ச.ஜெயமூர்த்தி, நகர்மன்ற தலைவர்,**

**கோட்டக்குப்பம் நகராட்சி**

**பொருள் எண்.1**

இந்நகராட்சியில் செயல்படுத்தப்படும் அனைத்து வகையான நிர்வாக செலவினங்கள், பொது சுகாதாரப்பணிகளுக்கான செலவினங்கள், பொறியியல் பிரிவு பணிகளுக்கான செலவினங்கள், அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு செலுத்தப்படும் கட்டணங்கள், பயிற்சி கட்டணங்கள், தெருவிளக்கு பராமரித்தல் குடிநீர் வசதி மேற்கொள்ளுவதற்கான செலவினங்கள் மற்றும் வருவாய் இனங்கள் குறித்த 2022-2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவு (தோராயம்) அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 38</u>**

பார்வையிடப்பட்டது, அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண். 2**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், அவர்களின் கடிதத்தின்படி கோட்டக்குப்பம் நகராட்சியில் UTIS ல் செயல்படுத்தப்பட்டு வருவதால், கோட்டக்குப்பம் நகராட்சி பகுதியில் நடத்தப்பட்டு வரும் அபாயகரமானதும் (ம) அருவருக்கத்தக்க தொழில்களுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ஆம் ஆண்டு பிரிவுகள் 150, 153, 215, 245, 249, 250, 255, 258, 262, 279 மற்றும் 285 ஆகியவற்றின்படி புதியதாக தொழில் உரிமக்கட்டணங்களையும் தமிழ்நாடு பொது சுகாதாரச்சட்டம் 1939ஆம் ஆண்டு பிரிவுகளின்படி பொதுமக்களுக்கும் பொது சுகாதாரத்திற்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையிலான செயல்களுக்கு 01.04.2022 முதல் வசூல் செய்ய இணைப்பில் கண்டுள்ளபடி புதிய கட்டணங்கள் நிர்ணயம் செய்து அபராத கட்டணங்களை விதித்திடவும் மற்றும் பதிவுகட்டணங்களை வசூல் செய்திடவும், மேற்படி கட்டணங்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைத்திடவும், பொதுமக்கள் ஆலோசனைகள், கருத்துக்கள் மற்றும் ஆட்சேபணைகள் கோருவதற்கும் மன்ற முன்அனுமதி பெறப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 39</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

தமிழகத்தில் தற்போது கொரோனா தொற்று பரவிவருவதால் அதனை கட்டுப்படுத்தும் விதமாக தமிழக அரசின் உத்திரவின்படி கோட்டக்குப்பம் பகுதியில் நோய் தொற்று தடுப்பு பகுதியில் கிருமி நாசினி தெளித்தல் போன்ற பணிகளை இந்நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 40</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12, அம்ருதா கார்டன் மற்றும் ஜமியத் நகர் பின்புறம் உள்ள பகுதிகளில் வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் மற்றும் அப்பகுதியில் உள்ள விவசாய நிலப்பகுதியிலிருந்து வெளியேறும் கழிவு நீர் தெருக்களில் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படுவதுடன் அப்பகுதி மக்களுக்கு தொற்று நோய் ஏற்படும் அபாயம் உள்ளதால் பொதுமக்களின் நலன்கருதி அப்பகுதியில் சிமெண்ட் பைப்புடன் கூடிய கச்சா வடிகால் அமைக்கும் பணியினை இந்நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 41</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் வீடுவீடாகச்சென்று மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை தரம்பிரித்து சேகரிக்க பயன்படுத்தப்பட்டு வரும் 10 (பத்து) மூன்று சக்கர வாகனங்களில் (Pushcarts) ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யும் பணியினை இந்நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 42</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப்பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TN 32 Q 2991 எண்ணுள்ள டிரெய்லர் வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யவும், வர்ணம் பூசவும், மேலும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 43</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பொதுசுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மைப்பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TN 32 T 5329 எண்ணுள்ள Standard Tractor 345 – வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யுவும், டிங்கரிங் பணி செய்யவும், புதியதாக வர்ணம் பூசி, அனுமதிக்கப்பட்ட வாசகங்களை எழுதிடவும், மேற்காணும் பணிகளை இந்நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 44</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப்பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் 8 மின்கல வாகனங்களில் ஏற்படும் சிறு பழுதுகளை சரிசெய்யவும், ஆண்டு பராமரிப்பு பணிகளை இந்நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 45</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.9**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப்பணிக்கு பயன்படுத்தப்பட்டுவரும் TN 32 Y 7580 எண்ணுள்ள டிராக்டர் வாகனத்திற்கு (NMT LMV Tractor) தகுதிச்சான்று பெறுவதற்கு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யவும், அதற்கான இச்செலவினத்தை இந்நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 46</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப்பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TN 32 Q 2980 எண்ணுள்ள டிரெய்லர் வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யவும், இச்செலவினத்தை இந்நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 47**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.11**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN 16 E 3645 பழுது ஏற்பட்டுள்ளதால் அதனை சரிசெய்யவும் மற்றும் காப்பீடு புதுப்பிக்கும் பணிக்கு இந்நகராட்சி பொதுநிதியில் மேற்க்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 48**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.12**

கோட்டக்குப்பம் நகராட்சியில் பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இரண்டாம் நிலை சேகரத்திற்கு 1 Tata Ace வாகனம் மற்றும் 2 Tractor வாகனம் கொண்டு சேகரம் செய்யப்பட்டு வருகிறது. இந்த மூன்று வாகனங்களை கொண்டு இப்பணியை மேற்கொள்வதற்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதுடன் பொது சுகாதார பணிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஆகையால் நாள் வாடகைக்கு 1 Tractor அமர்த்தி பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் அவற்றிற்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 49**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.13**

கோட்டக்குப்பம் நகராட்சியில் அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வரும் மின்னாக்கி பழுது ஏற்பட்டுள்ளதால் மின்தடைபடும் நேரங்களில் அலுவலக பணிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவே அலுவலக பணிகளை கருத்தில் கொண்டு அலுவலக பணிகள் தடைபடாதவாறு வாடகைக்கு மின்னாக்கி அமைத்துக்கொள்ளவும், இவற்றால் ஏற்படும் செலவினங்களை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும், அலுவலக உபயோகத்திற்கு புதியதாக 20kv மின்னாக்கியினை பொது நிதியில் கொள்முதல் செய்து கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 50**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.14**

கோட்டக்குப்பம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவைப்படும் எழுதுப்பொருட்கள் மற்றும் பதிவேடுகள் இந்நகராட்சியின் பொதுநிதியில் கொள்முதல் செய்துக்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 51**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.15**

இந்நகராட்சி பகுதியில் வசிக்கும் பொது மக்களுக்கு கொசுவினால் பரவும் டெங்கு, மலேரியா, சிக்கன்குனியா போன்ற நோய்கள் தாக்காமல் இருக்கும் வகையில் கொசுக்களை ஒழித்திடும் புகை மருந்து தெளிக்கும் இயந்திரம் (Mega Fogging Machine 1 No) வாங்குவதற்கும் அதற்கான இச்செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 52**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.16**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கும், தெரு சாலைகளில் வளர்ந்துள்ள செடி கொடிகளை அகற்றுவதற்கும், மண்மேடுகளை சீர் செய்திடவும், 1 மணி நேர வாடகை அடிப்படையில் JCB இயந்திரத்தினை சுமார் 100 மணி நேரம் வாடகைக்கு அமர்த்தி பணியினை மேற்கொள்ளவும், அதற்கான இச்செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 53**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.17**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20789/2021/ UPA1 நாள்.16.06.2022 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1966/2022/அ1, நாள்.17.06.2022ல் அறிவிப்பில் "சாலையோர வியாபாரிகளுக்கான திட்டத்தில்" தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட, நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை வழங்கப்பட்டு, அவர்கள் எவ்வித சிரமமும் இன்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 2022-2023 நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு சாலையோர

வியாபாரிகளுக்கு Biometric and QR/ Barcode–வுடன் கூடிய அடையாள அட்டை வழங்குதல், Certificate of vending, விரிவாக திட்ட அறிக்கை தயார் செய்யவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும், விரைவாக இப்பணியை மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தகுதியான சாலையோர வியாபாரிகளை 2022–2023 ஆம் ஆண்டிற்கு புதியதாக கணக்கெடுப்பு நடத்தவும், அவர்களுக்கு சான்றிதழ் மற்றும் Biometric and QR/ Barcode–வுடன் கூடிய அடையாள அட்டை வழங்கவும் மற்றும் விரிவான செயல் திட்டம் மற்றும் அறிக்கை தயார் செய்ய ஆகும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 54</u>**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.18**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட திரு.முகமது யூசுப் த/பெ அப்துல் ரஹீம், என்பவர் சர்வே எண்.370/2A1A1ல் ரஹ்மான் நகர் மனைப்பிரிவில் பொது மக்கள் நலன்கருதி 382 1/2 சதுர அடி இடத்தினை கோட்டக்குப்பம் நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்துள்ளார். மேற்படி மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 55</u>**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.19**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 25 சின்னகோட்டக்குப்பம் ரெயின்போகார்டன் பகுதியில் சுமார் 45 குடும்பகள் வசித்து வருகின்றனர். அப்பகுதியில் குடிநீர் பைப்லைன் அமைக்கப்படாததால் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க இயலவில்லை ஆகையால் பொது மக்கள் நலன் கருதி இந்நகராட்சி பொது நிதியில் புதியதாக பைப்லைன் அமைத்துக்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 56</u>**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.20**

இந்நகராட்சி பொது சுகாதாரபிரிவின் மூலம் பொது மக்களுக்கு கொரோனா நோய் தடுப்பூசி போடும் சிறப்பு மெகா முகாம் குறித்தும், திடக்கழிவு மேலாண்மை குறித்தும், பொது சுகாதார நல வாழ்வு குறித்தும், டெங்கு நோய் தடுப்பு மற்றும் தூய்மை இந்தியா திட்டம் குறித்தும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பேனர்கள், சட்டப்பூர்வ அறிவிப்பு குறித்து வாசகங்கள் அடங்கிய

பேனர்கள் பல்வேறு அளவுகளில் அச்சிட்ட அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 57**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.21**

வருவாய் வட்டாட்சியர், வானூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.அ2/22220/2021 நாள்.13.04.2022ல் கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கோட்டக்குப்பம் கிராம புல எண்.347/2ல் உள்ள 0.23.5 ஏர்ஸ் விஸ்தீரணம் உள்ள களம் புறம்போக்கில் 0.07.0 ஏர்ஸ் விஸ்தீரணத்தினை கொண்ட இடத்தில் நத்தமாக நிலம் மாற்றம் செய்து 12 நபர்களுக்கு பட்டா வழங்கும் பொருட்டு நகராட்சி சார்பாக தடையின்மை சான்று வழங்க கோரப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்ட நபர்களுக்கு நில வகை மாற்றம் மற்றும் பட்டா வழங்கிட எவ்வித ஆட்சேபனையும் இல்லையென தெரிவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | கிராமம் | ஆக்கிரமிப்புதாரர் பெயர் | சர்வே எண் | வகை பாடு | விஸ்தீர ணம் (ச.மீ) |
|---|---|---|---|---|---|
| 1 | கோட்டக்குப்பம் | திருமதி.ரங்கநாயகி க/பெ முனுசாமி | 347/18 | நத்தம் | 00040 |
| 2 | | திருமதி.டில்லிஅம்மாள் க/பெ வரதன் | 347/19 | நத்தம் | 00040 |
| 3 | | திருமதி.முத்துலட்சுமி க/பெ கனகராஜ் | 347/20 | நத்தம் | 00040 |
| 4 | | திருமதி.சகுந்தலா க/பெ குப்பன் | 347/21 | நத்தம் | 00040 |
| 5 | | திருமதி. செந்தாமரை க/பெ அப்துல் காதர் | 347/22 | நத்தம் | 00040 |
| 6 | | திருமதி.ராஜம் க/பெ எட்டியான் | 347/23 | நத்தம் | 00040 |
| 7 | | திருமதி. அஞ்சலை க/பெ குமார் | 347/24 | நத்தம் | 00040 |
| 8 | | திருமதி.விஜயா க/பெ குமார் | 347/25 | நத்தம் | 00040 |
| 9 | | திருமதி.கஸ்தூரி க/பெ பார்த்தசாரதி | 347/26 | நத்தம் | 00040 |
| 10 | | திருமதி.புவனேஷ்வரி க/பெ சக்திவேல் | 347/27 | நத்தம் | 00040 |
| 11 | | திருமதி.நாகமுத்து க/பெ முனுசாமி | 347/28 | நத்தம் | 00040 |
| 12 | | திருமதி.வஜ்ஜிரி க/பெ குத்புதீன் | 347/29 | நத்தம் | 00040 |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 58**

சர்வே எண்.347/2ல் களம் புறம்போக்கு இடத்தில் அரசு கட்டிடங்கள் உள்ளதால் அவ்விடத்திற்கு பதிலாக மாற்று இடம் தேர்வு செய்து வழங்க அறிவுறுத்தப்படுகிறது.

**பொருள் எண்.22**

கோட்டக்குப்பம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0ன் கீழ் வார்டு எண்.07, தந்திராயன்குப்பம் கடற்கரை வடக்குப்பகுதியில் பொதுக்கழிப்பிடம் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.5990/2022/SBM, நாள்.11.04.2022ன்படி கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு நிர்வாக

அனுமதி வழங்கப்பட்டு இப்பணியை மேற்கொள்ள 30.05.2022ம் தேதிய அறிவிப்பின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 09.06.2022ம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் கீழ்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அட்டவணைபடுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் | |
|---|---|---|---|---|
| | | | PKP கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | SMR கன்ஸ்ட்ரஷன்ஸ் |
| 1 | வார்டு எண்.07, தந்திராயன்குப்பம் கடற்கரை வடக்குப்பகுதியில் பொதுக்கழிப்பிடம் அமைக்கும் பணி | 36.28 | −0.15% Below the Estimate | 0.12% Above the Estimate |

மேற்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்க மன்ற முன்அனுமதி பெறப்பட்டுள்ளதை, மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மான எண். 59</u>

குறைந்த விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண்.23**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நமக்கு நாமே திட்டம் 2021−22ன் கீழ் பொது மக்களின் நலன் கருதி இருள் சூழ்ந்துள்ள பகுதியில் புதியதாக உயர்கோபுர மின்விளக்கு மற்றும் ஆழ்துளைகிணறு அமைக்க தனியார் பங்களிப்பாக ரூ.7.00 இலட்சம் மற்றும் அரசு பங்களிப்பாக ரூ.14.00 இலட்சம் மொத்தம் ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்காணும் இடங்களில் LED மின் விளக்குகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளுடன் கூடிய பைப்லைன் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.27519−43/2021/P2, நாள்.16.06.2022ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து இப்பணியை மேற்கொள்ள 17.06.2022ம் தேதிய அறிவிப்பின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 30.06.2022ம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் கீழ்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அட்டவணைபடுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் | |
|---|---|---|---|---|
| | | | SM Traders, Puducherry | Ever Green Traders, Cuddalore |
| 1 | வார்டுஎண்.2, ஆரோவில் மெயின் ரோடு (பெரியபாளையத்து அம்மன் கோயில்) அருகில் உயர்கோபுர மின்விளக்கு (12m Height mini mast with 6 No's of 150W LED Fitting) அமைக்கும் பணி | 4.00 | 0.05% Below the Estimate | 0.57% Above the Estimate |
| 2 | வார்டு எண்.3, பெரியமுதலியார்சாவடி காலனி பகுதியில் உயர்கோபுர மின்விளக்கு (12m Height mini mast with 6 No's of 150W LED Fitting) அமைக்கும் பணி | 4.00 | 0.05% Below the Estimate | 0.57% Above the Estimate |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வார்டு எண்.13, சின்னகோட்டக்குப்பம், ஆதிதிராவிடர் காலனி பகுதியில் உயர்கோபுர மின்விளக்கு (12m Height mini mast with 6 No's of 150W LED Fitting) அமைக்கும் பணி | 4.00 | 0.05% Below the Estimate | 0.57% Above the Estimate |
| 4 | வார்டு எண்.17, பஜார் வீதி, மாமூலப்பை தெரு சந்திப்பில் உயர் கோபுர மின்விளக்கு (12m Height mini mast with 6 No's of 150W LED Fitting) அமைக்கும் பணி | 4.00 | 0.05% Below the Estimate | 0.57% Above the Estimate |
| 5 | வார்டு எண்.26, மரைக்காயர் தெரு– III பள்ளிவாசல் அருகில் உயர் கோபுர மின்விளக்கு (12m Height mini mast with 6 No's of 150W LED Fitting) அமைக்கும் பணி | 4.00 | 0.05% Below the Estimate | 0.57% Above the Estimate |
| 6 | வார்டு எண்.27, சோதனைக்குப்பம் சமுதாய கழிவறைக்கு புதிய ஆழ்துளை கிணறு மற்றும் பைப்லைன் அமைத்தல் | 1.00 | 0.11% Below the Estimate | 0.89% Above the Estimate |
| மொத்தம் | | **21.00** | | |

மேற்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்க மன்ற முன்அனுமதி பெறப்பட்டுள்ளதை, மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 60**

குறைந்த விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண்.24**

கோட்டக்குப்பம் நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் (Un Tied Grand) 2021–22 திட்டத்தின் கீழ் தேர்வுசெய்யப்பட்ட பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களின் கடித ந.க.எண்.31118/2021/CFC நாள்.20.06.2022ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து இப்பணியை மேற்கொள்ள 20.06.2022ம் தேதிய அறிவிப்பின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 30.06.2022ம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் கீழ்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அட்டவணைபடுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் | |
|---|---|---|---|---|
| | | | SRV கன்ஸ்ட்ரஷன்ஸ் | P. முருகன் ஒப்பந்ததாரர் |
| 1 | வார்டு எண்.25 ரெயின்போ கார்டன் 1வது மெயின்ரோட்டில் மண் சாலையிலிருந்து தார் சாலை அமைக்கும் பணி | 9.79 | 0.07% Below the Estimate | 0.73% Above the Estimate |
| 2 | வார்டு எண்.25 ரெயின்போ கார்டன் 2வது மெயின்ரோட்டில் மண் சாலையிலிருந்து தார் சாலை அமைக்கும் பணி | 9.68 | 0.07% Below the Estimate | 0.73% Above the Estimate |
| 3 | வார்டு எண்.25 ரெயின்போ கார்டன் 3வது மெயின்ரோட்டில் மண் சாலையிலிருந்து தார் சாலை அமைக்கும் பணி | 3.45 | 0.07% Below the Estimate | 0.73% Above the Estimate |
| 4 | வார்டு எண்.25 ரெயின்போ கார்டன் 2வது | 8.03 | 0.07% | 0.73% |

| | | | | |
|---|---|---|---|---|
| | மெயின்ரோட்டில் 1வது குறுக்கு தெருவில் மண் சாலையிலிருந்து தார் சாலை அமைக்கும் பணி | | Below the Estimate | Above the Estimate |
| 5 | வார்டு எண்.25 ரெயின்போ கார்டன் 2வது மெயின்ரோட்டில் 2வது குறுக்கு தெருவில் மண் சாலையிலிருந்து தார் சாலை அமைக்கும் பணி | 7.58 | 0.07% Below the Estimate | 0.73% Above the Estimate |
| 6 | வார்டு எண்.25 ரெயின்போ கார்டன் 2வது மெயின்ரோட்டில் 3வது குறுக்கு தெருவில் மண் சாலையிலிருந்து தார் சாலை அமைக்கும் பணி | 7.88 | 0.07% Below the Estimate | 0.73% Above the Estimate |

மேற்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்க மன்ற முன்அனுமதி பெறப்பட்டுள்ளதை, மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 61</u>**

குறைந்த விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண்.25**

கோட்டக்குப்பம் நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2021-22ம் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட பணிக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1653/2020/பேரூ.1 நாள்.06.12.2021ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து இப்பணியை மேற்கொள்ள 14.07.2022ம் தேதிய அறிவிப்பின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 21.07.2022ம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் கீழ்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அட்டவணைபடுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் | |
|---|---|---|---|---|
| | | | PKP கன்ஸ்ட்ரஷன்ஸ் | SRV கன்ஸ்ட்ரஷன்ஸ் |
| 1 | பழைய வார்டு எண்.5, புதிய வார்டு எண்.12, அம்ருதா கார்டன் பூங்கா- I & II மேம்பாடு செய்தல் (சுற்றுச்சுவர், மின்விளக்கு ஆழ்துளை கிணறுடன் கூடிய தண்ணீர் வசதி செய்தல்) | 17.80 | 0.08% Below the Estimate | 1.28% Above the Estimate |

மேற்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 62</u>**

குறைந்த விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண்.26**

கோட்டக்குப்பம் நகராட்சியின் 12 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் 3 தரைதள தொட்டிகள் மூலம் தினசரி நாள் ஒன்றுக்கு 4.20 MLD குடிநீர் பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது. அவற்றில் நோய் தொற்று பரவா வண்ணம் பாதுகாப்பான முறையில் குடிநீர் வழங்க ஏதுவாக குளோரின் ஹைபோ குளோரைடு கலந்து வழங்க சுகாதார துறை அறிவுறுத்தியதால் தேவையான அளவு குளோரின் ஹைபோ குளோரைடு இந்நகராட்சியின் பொது நிதியில் கொள்முதல் செய்து கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 63**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.27**

அரசாணை எண். 79 நாள். 02.06.2022 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் தமிழக முதல்வர் அவர்களின் அறிவுறுத்துதலின்படி தமிழக அரசு தனது வளர்ச்சிக்கான திட்டத்தில் நகர தூய்மைக்கு மிகுந்த முக்கியதுவம் அளித்துவருகிறது. சுத்தமான, பசுமையான மற்றும் நீடித்த சுற்றுச்சூழலை உறுதி செய்யும் பொருட்டு நகரங்களில், பெருமளவிலான மக்கள் பங்கேற்புடன், ஒவ்வொலு மாதமும் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் தீவிர தூய்மைப் பணிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் (Cleanliness Drive) நடத்த அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தீவிர தூய்மை பணிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்த தேவையான உபகரணங்கள் மற்றும் செலவினங்களை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 64**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.28**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், அவர்களின் கடிதத்தின்படி கோட்டக்குப்பம் நகராட்சியில் UTIS ல் செயல்படுத்தப்பட்டு வருவதால், கோட்டக்குப்பம் நகராட்சி பகுதியில் நடத்தப்பட்டு வரும் அபாயகரமானதும் (ம) அருவருக்கத்தக்க தொழில்களுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ஆம் ஆண்டு பிரிவுகள் 150, 153, 215, 245, 249, 250, 255,258,262,279 மற்றும் 285 ஆகியவற்றின்படி புதியதாக தொழில் உரிமக்கட்டணங்களையும் தமிழ்நாடு பொது சுகாதாரச்சட்டம் 1939ஆம் ஆண்டு பிரிவுகளின்படி பொதுமக்களுக்கும் பொது சுகாதாரத்திற்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையிலான செயல்களுக்கு 01.04.2022 முதல் வசூல் செய்ய இணைப்பில் கண்டுள்ளபடி புதிய கட்டணங்கள் நிர்ணயம் செய்து அபராத கட்டணங்களை விதித்திடவும் மற்றும் பதிவுகட்டணங்களை வசூல் செய்திடவும், மேற்படி கட்டணங்கள் பொதுமக்கள் அறியும்

வகையிலும், பொதுமக்களிடம் ஆலோசனைகள், கருத்துக்கள் கோர தினசரி நாளிதழில் 21.06.2022ம் தேதியில் மற்றும் தமிழ்முரசு நாளிதழிலும், 22.06.2022 அன்று தினத்தந்தி நாளிதழிலும் விளம்பரம் வெளியிடப்பட்டது. பொதுமக்களிடம் ஆலோசனைகள், கருத்துக்கள் ஏதும் வரப்பெறாததால் புதியகட்டணங்களை நிர்ணயம் செய்து அபராத கட்டணங்கள் விதித்திடவும் பதிவு கட்டணங்கள் வசூல் செய்திடவும், மாவட்ட நாளிதழில் பிரசுரம் செய்திட இறுதி தீர்மானம் நிறைவேற்றிட மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும்.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. புதியகட்டணங்களை நிர்ணயம் செய்து அபராத கட்டணங்கள் விதித்திடவும் பதிவு கட்டணங்கள் வசூல் செய்திடவும், மாவட்ட நாளிதழில் பிரசுரம் செய்திட மன்ற அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 65**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்.29**

**கோட்டக்குப்பம்** நகராட்சிக்கு நகர் மன்றத் தலைவர் மற்றும் நகராட்சி பொறியாளருக்கு இரண்டு (Bolero) ஈப்பு வாகனம் வாங்க நகரமன்ற தீர்மான எண். 9 நாள். 31.03.2022ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.11753/2022/எம்3 நாள். 10.05.2022ன்படி நகர்மன்ற தலைவர் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக ஒரு ஸ்கார்பியோ வாகனம் மற்றும் நகராட்சி பொறியாளருக்கு ஒரு பொலிரோ வாகனம் மொத்தம் இரண்டு வாகனங்கள் வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 66**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.30**

**விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம்** ந.க.எண். ஐ1/100/2022 நாள். 01.07.2022ன்படி, கோட்டக்குப்பம் நகராட்சி ஏற்கனவே பேரூராட்சியாக செயல்பட்ட போது செயல் அலுவலரை பிரதிவாதியாக சேர்த்து தொடரப்பட்ட வழக்கு எண். OS.No. 23/2019 நிலுவையில் உள்ள வழக்கிற்கு அரசு கூடுதல் வழக்கறிஞர் வழக்கு கட்டணமாக ரூ.12,000/– செலுத்த கேட்பு வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 67**

அனுமதிக்கப்பட்டது

நகர் மன்ற தலைவர்
கோட்டக்குப்பம் நகராட்சி

<u>மேசைபொருள்</u>

**2022ம் ஆண்டு ஜீலை 29ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கோட்டக்குப்பம் நகராட்சியில் அவசரகூட்டம் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.**

**முன்னிலை .திரு.ச.ஜெயமூர்த்தி, நகர்மன்ற தலைவர், கோட்டக்குப்பம் நகராட்சி**

**பொருள் எண்.01**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியமுதலியார்சாவடி முதல் சின்னமுதலியார்சாவடி ஓடை வரை வடிகால் வசதி இல்லாதா காரணத்தினால் அப்பகுதியில் உள்ள வீடு மற்றும் வணிக நிறுவனங்களிடமிருந்து வரும் கழிவு நீர் மற்றும் மழை நீர் வெளியே செல்ல வழியில்லாமல் தெருக்களில் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. ஆகையால் நெடுஞ்சாலை துறை மூலம் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் இசிஆர் சாலையில் இருபுறமும் வடிகால் அமைக்கும் பணியினை நெடுஞ்சாலை துறையின் மூலம் மேற்கொள்ள நகர்மன்றத்தின் மூலம் தீர்மானம் நிறைவேற்றிட மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 68</u>**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.02**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நெடுஞ்சாலை துறை மூலம் சாலை விரிவாக்கம் பணியின் போது இந்நகராட்சியின் குடிநீர் பைப்லைன் முற்றிலும் சேதமடைந்துள்ளதால் அவ்வப்போது கிழக்கு கடற்கரை சாலையில் பைப்லைன் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாகுவதுடன் போக்குவரத்துக்கும் இடையூறாக உள்ளது. ஆகையால் பெரியமுதலியார்சாவடி முதல் ECR ரவுண்டானா வரை இரண்டு பக்கமும் "6" PVC பைப்லைன் (2.5x2) 5 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைத்தல் மற்றும் 5 இடங்களில் சாலை குறுக்கே துளையிட்டு பைப்லைன் அமைத்தல் பணியினை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 69</u>**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.03**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட காந்திவீதியில் அரசு மேல்நிலைப்பள்ளி, ரெயின்போ பள்ளி அமைந்துள்ளதால் பள்ளி நேரங்களில் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் சாலையை கடந்து செல்வதற்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதாலும், போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாலும் சாலை விபத்துகளை தடுக்கும் பொருட்டு, இணைப்பு சாலைகள் சந்திப்பு மற்றும் பெரிய பள்ளிவாசல் நியாயவிலைக்கடை பகுதிகளில்

Speed Breaks அமைத்தல் பணியை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 70</u>**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.04**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை நிலை எண்.94, நாள்.01.11.2021 அரசாணையின்படி கோட்டக்குப்பம் சிறப்புநிலை பேரூராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. மேலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை எண்.34ல் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட நகராட்சிகளுக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்ய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து தற்போதைய அலுவலகத்தின் எதிரில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதிய அலுவலக கட்டிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 71</u>**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.05**

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் 07.03.2019 தேதிய சுற்றறிக்கை ந.க.எண்.50977/2018/டிபி3-ல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019-விதி எண்.23-ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட உத்தேச வரைபடம் / சான்றுகள் அதன் தொடர்புடைய விண்ணப்பங்கள் தயார் செய்யும் பணிக்கு உரிய தொழில் சார்ந்த வல்லுனர்கள் உரிமம் பகிர்வு செய்ய நடைமுறைகளில் பரிசோதனைக்குழுவில் (Screening Committee) (1) நகராட்சி ஆணையாளர் (2) நகராட்சி பொறியாளர் (3) நகரமைப்பு ஆய்வாளர், ஆகிய மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று அமைத்திட உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காண் 3 உறுப்பினர்கள் கொண்ட Screening Committee அமைத்திடவும் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள 1 முதல் 7 வரையிலான நிபந்தனைகளுக்குட்பட்டும் நடவடிக்கை மேற்கொள்ள பரிசோதனைக்குழு அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.294/2022/F1)

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 72</u>**

அனுமதிக்கப்பட்டது

நகர் மன்ற தலைவர்

கோட்டக்குப்பம் நகராட்சி